2023 ஜனவரி 11]

33. உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் புதுமைத் திறன் உச்சி மாநாடு, 'UMAGINE' முதன்முறையாக சென்னையில் வரும் மார்ச் மாதத்தில் நடைபெற உள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், கல்வியாளர்கள், தொழில்நுட்பத் துறை முன்னோடிகள் ஆகியோரை ஒரே தளத்தில் ஒருங்கிணைத்து தொழில்நுட்பத் துறைக்கு புதிய உத்வேகத்தை இம்மாநாடு ஏற்படுத்தும்.

34. 1920 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டம், பல்வேறு காலங்களில் தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டு, நாட்டிற்கே முன்மாதிரியாக இன்று திகழ்கிறது. ஏழை எளிய மாணவர்கள் அதிக அளவில் பள்ளிகளில் சேர்வதற்கும், தொடர்ந்து பயில்வதற்கும் இத்திட்டம் பெரும் பங்காற்றியுள்ளது. இதன் அடுத்த பரிணாமமாக, கல்வி கற்கும் கனவுகள் பல சுமந்துகொண்டு, வெறும் வயிற்றுடன் காலையில் பள்ளிக்கு வரும் குழந்தைகள் கல்வியில் கவனம் செலுத்த இயலாத நிலையைக் களைய, 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, *1,545* அரசு தொடக்கப் பள்ளிகளில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, *1.14* இலட்சம் மாணவர்கள் தினமும் பயன்பெறுகின்றனர். மதிய உணவுத் திட்டம் போன்றே இத்திட்டமும் நமது நாட்டிற்கே முன்னோடியாக விளங்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

35. தமிழ்நாடு, பல்துறைகளில் தலைசிறந்து விளங்கவும், நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை வளர்ந்த நாடுகளுக்கு நிகராக உயர்த்தவும், *2030* ஆம் ஆண்டிற்குள், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி இலக்கை அடைய வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலக்கிட்டுள்ளார்கள். இந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட பல முதலீட்டு மாநாடுகள், உலகளவில் முதலீடுகளை ஈர்க்க மேற்கொண்ட முன்னெடுப்புகள் ஆகியவற்றின் பயனாக, ஜூலை *2021* முதல் இன்றுவரை *207* புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதனால், *2,23,210* கோடி ரூபாய் முதலீடும் *3,44,150* நபர்களுக்கான வேலைவாய்ப்புகளும் உறுதிசெய்யப்படும். இக்காலகட்டத்தில், *28,232* கோடி ரூபாய் அந்நிய முதலீட்டை தமிழ்நாடு ஈர்த்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.